[4th March 1969

Arrests en masse by Police in Thalavaipuram.

* 107 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased o state the reason for the arrears of 300 persons en masse by the Police in January 1968 at Thalaivaipuram in Rajapalayam of Ramanathapuram district?

தளவாய்புரத்தில் பலர் கைது செய்யப்பட்ட சம்பவம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

இராமநாதபுரம் மாவட்ட ராஜபாளையம், தளவாய்புரத்தில் மொத்தமாக 300 பேரை 1968 ஜனவரி மாதத்தில் போலீசார் கைது செய்த காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: 7—1—1968. காலை முதல் 15 நாட்களுக்கு ராஜபாளையம் வட்ட மாஜிஸ்டிரேட் குற்ற நடைமுறை சட்டக் கோவையின் 144-வது பிரிவின் கீழ்ச் சாற்றிய தடையுத்தரவை மீறியதற்காக 7—1—1968 தேதியன்று தளவாய்புரத்தில் 330 (முன்னூற்று முப்பது) பேரை (300 பேரல்ல) காவலர் கைது செய்தனர்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, 330 பேரும் மொத்தமாகக் கைது செய்யப்படக் காரணம் என்ன ? அவர்கள் மீது என்ன வழக்கு தொடரப்பட்டது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்கள் தடையுத்தரவை மீறினார்கள் என்பதற்காகக் கைது செய்யப்பட்டார்கள். 144, 143, 147, 341, 188 ஐ.பி.சி. படி 16 வழக்குகள் திருவில்லிபுத்தூரில் போடப்பட்டன.

Congress meeting held at Sivakasi.

* 108. Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether some people indulged in pelting of stones in the Congress meeting held at Sivakasi in February 1968; and

(b) the result of the case booked by the Police in this regard?

சிவகாசியில் நடந்த காங்கிரஸ் பொதுக்கூட்டம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிவகாசி காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் 1968 பிப்ரவரியில் சிலர் கற்கள் வீசினார்களா ?

(இ) இது சம்பந்தமாக போலீசார் பதிவு செய்த வழக்கின் முடிவென்ன ?